TNED140001382020

Presented on : 21-02-2020
Registered on : 21-02-2020
Decided on : 13-07-2026
Duration : 6 years, 4 months, 21 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண் 1. பவானி.**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 13ம் நாள் திங்கட்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 29ம் நாள்

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.102/2020**

மாநில அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
அம்மாபேட்டை காவல் நிலையம்,
அம்மாபேட்டை.
(குற்ற எண். 84/2019). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

ரஞ்சித்குமார் (24/2019),
த/பெ.பழனிகவுண்டர் ... எதிரி

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | காவல் உதவி ஆய்வாளர்,<br>அம்மாபேட்டை காவல் நிலையம்,<br>அம்மாபேட்டை.<br>(குற்ற எண். 84/2019). |
| 2. | எதிரியின் பெயர் | ரஞ்சித்குமார் (24/2019),<br>த/பெ.பழனிகவுண்டர் |
| 3. | எதிரியின் முகவரி | க.எண்.பெரியார் நகர், சமத்துவபுரம்,<br>சித்தோடு, ஈரோடு. |
| 4. | குற்ற நிகழ்வு நாள் | 22.04.2019 |
| 5. | புகார் தேதி | 23.04.2019 |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி | N/A |
| 7. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | Station Bail |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:16:58 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | Commitment | N/A | | |
| 9. | கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள் | N/A | | |
| 10. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 09.09.2024 | 09.09.2024 |
| | | அ.சா.2 | 01.07.2025 | 01.07.2025 |
| | | அ.சா.3 | 01.07.2025 | 01.07.2025 |
| | | அ.சா.4 | 08.07.2025 | 08.07.2025 |
| | | அ.சா.5 | 08.07.2025 | 08.07.2025 |
| | | அ.சா.6 | 07.04.2026 | 07.04.2026 |
| | | அ.சா.7 | 15.04.2026 | 15.04.2026 |
| 11. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 16.06.2026 | | |
| 12 | தண்டனை அல்லது உத்தரவு | 13.07.2026 | | |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 13.07.2026 | | |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம் | | |

இவ்வழக்கு கடந்த 21.02.2020ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II திருமதி. P.கயல்விழி அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.T.சரவணன் அவர்களும் ஆஜராகி நடத்திட, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 22.04.2019ம் தேதி மாலை 16.00 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அம்மாபேட்டையிலிருந்து பவானி மெயின் ரோட்டில்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.13 18:17:02 +0530

ஆனந்தம்பாளையம் வேபிரிட்ஜ் அருகே, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காயம்பட்ட நல்லப்பன் என்பவர் TN 36 C 4161 என்ற TVS 50யில் சென்று கொண்டிருந்தபோது மேற்படி சாலையில் எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பதிவு செய்யப்படாத பதிவெண் இல்லாத Honda DIO வானத்தை எதிரி அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிசென்று நல்லப்பன் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில், நல்லப்பன் என்பவருக்கு இடது கால் பாதத்திற்கு மேல் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேலும், எதிரி தான் ஓட்டி வந்த Honda DIO இருசக்கர வாகனத்தை பதிவு செய்யாமலும், மற்றும் நம்பர் பிளேட் இல்லாமலும், மேற்படி வாகனத்திற்கு காப்பீட்டு சான்று இல்லாமலும், ஓட்டுனர் உரிமம் இல்லாமலும் ஓட்டி சென்றுள்ளார் என்றும், எனவே, எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 338 மற்றும் மோட்டார் வாகன சட்டப் பிரிவு 39(1) r/w 192(1), 50 r/w 177, 146 r/w 196, 3 r/w 181ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, அம்மாபேட்டை காவல் நிலைய, காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 338 மற்றும் மோட்டார் வாகன சட்டப் பிரிவு 39(1) r/w 192(1), 50 r/w 177, 146 r/w 196, 3 r/w 181ன் கீழ் குற்றச்சாட்டின் சாராம்சத்தை கு.வி.மு.ச. பிரிவு 251ன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:04 +0530

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-</u>**

கடந்த 22.04.2019ம் தேதி மாலை 16.00 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அம்மாபேட்டையிலிருந்து பவானி மெயின் ரோட்டில் ஆனந்தம்பாளையம் வேபிரிட்ஜ் அருகே, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காயம்பட்ட நல்லப்பன் என்பவர் TN 36 C 4161 என்ற TVS 50யில் சென்று கொண்டிருந்தபோது மேற்படி சாலையில் எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பதிவு செய்யப்படாத பதிவெண் இல்லாத Honda DIO வானத்தை எதிரி அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிசென்று நல்லப்பன் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில், நல்லப்பன் என்பவருக்கு இடது கால் பாதத்திற்கு மேல் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேலும், எதிரி தான் ஓட்டி வந்த Honda DIO இருசக்கர வாகனத்தை பதிவு செய்யாமலும், மற்றும் நம்பர் பிளேட் இல்லாமலும், மேற்படி வாகனத்திற்கு காப்பீட்டு சான்று இல்லாமலும், ஓட்டுனர் உரிமம் இல்லாமலும் ஓட்டி சென்றுள்ளார்.

4.2 கடந்த 23.04.2019ம் தேதியன்று 16.30 மணிக்கு நிலைய தலைமை காவலர் முருகேசன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபொழுது இளமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான அ.சா.ஆ.4 புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண்.84/2019, இ.த.ச பிரிவுகள் 279, 337ன் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற அ.சா.6 முருகேசன் சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான சண்முகம் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசரும், அ.சா.ஆ.6 மாதிரி வரைபடமும் தயார் செய்தும், பின்னர் சாட்சிகள் இளமுருகன், தர்மலிங்கம், வெங்கடேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4.3 பின்னர் வழக்கில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தும், தனது விசாரணையில் இருந்து சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி கடந்த



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.13 18:17:08 +0530

11.12.2019ம் தேதியன்று நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க நிலையப் பிணையில் விடுவித்தும், 11.12.2019ம் தேதியன்று விபத்தில் காயம்பட்ட நல்லப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7 TN 36 C 4161 என்ற TVS 50 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை, அ.சா.ஆ.8 எதிரி ரஞ்சித் குமார் ஓட்டிச் சென்ற பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றும், பின்னர் வாதி நல்லப்பன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பாலசுப்பிரமணியன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.9 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.10 காயச்சான்று பெற்றுள்ளார்.

4.4 மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழில் சாட்சி நல்லப்பனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என குறிப்பிட்டு இருந்ததாலும், இந்த வழக்கின் எதிரி ரஞ்சித் குமார் என்பவர் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனம் பதிவு செய்யப்படாமலும், நம்பர் பிளேட் இல்லாமலும், மேற்படி வாகனத்திற்கு காப்பீடு சான்று இல்லாமலும் மற்றும் எதிரிக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியது தெரிய வந்ததாலும், வழக்கின் இ.த.ச பிரிவை 279, 337விலிருந்து இ.த.ச பிரிவுகள் 279, 338 and 39(1) r/w 192(1), 50 r/w 177, 146 r/w 196 and 3 r/w 181 of MV ACT ஆக மாறுதல் செய்து அ.சா.ஆ.11 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், பின்னர் தொடர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை நிலைய உதவி ஆய்வாளர் சிவாஜி அவர்களிடம் ஒப்புவித்தும், வழக்கு கோப்பை பெற்ற அவர் சம்பவயிடம் சென்று சாட்சிகளின் விசாரணை மற்றும் பார்வை மகஜர் ஆகியவை உதவி ஆய்வாளரிடம் பதிவு செய்துள்ள வழக்கு கோப்பின்படி ஒத்திருந்ததால் புதியதாக எதுவும் தயார் செய்யவில்லை என்றும், அத்துடன் அவர் தனது புலன் விசாரணையை முடித்து கடந்த 11.12.2019 ஆம் தேதியன்று எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 IPC and 39(1) r/w 192(1), 50 r/w 177, 146 r/w 196 and 3 r/w 181 of MV ACT கீழ் இறுதி அறிக்கையை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:11 +0530

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரியை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார். எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 279, 338 மற்றும் மோட்டார் வாகன சட்டப் பிரிவு 39(1) r/w 192(1), 50 r/w 177, 146 r/w 196, 3 r/w 181ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **தீர்வு**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், கடந்த 22.04.2019 ம் தேதி மாலை 16.00 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அம்மாபேட்டையிலிருந்து பவாளி மெயின் ரோட்டில் ஆனந்தம்பாளையம் வேபிரிட்ஜ் அருகே, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காயம்பட்ட நல்லப்பன் என்பவர் TN 36 C 4161 என்ற TVS 50யில் சென்று கொண்டிருந்தபோது மேற்படி சாலையில் எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பதிவு செய்யப்படாத பதிவெண் இல்லாத Honda DIO வானத்தை எதிரி அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிசென்று நல்லப்பன் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில், நல்லப்பன் என்பவருக்கு இடது கால் பாதத்திற்கு மேல் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேலும், எதிரி தான் ஓட்டி வந்த Honda DIO இருசக்கர வாகனத்தை பதிவு செய்யாமலும், மற்றும் நம்பர் பிளேட் இல்லாமலும், மேற்படி வாகனத்திற்கு காப்பீட்டு சான்று இல்லாமலும், ஓட்டுனர் உரிமம் இல்லாமலும் ஓட்டி சென்ற குற்றத்திற்காக சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:15 +0530

8. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து நடைபெறவில்லை என்றும், இவ்வழக்கில் அ.சா.2 நல்லப்பன் சாலையில் வரும் வாகனத்தை கவனிக்காமல் அவரது இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றதால் மேற்படி விபத்து நடைபெற்றது என்றும், எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து ஏற்பட்டதாக சாட்சிகள் குறிப்பிட்டு சாட்சியமளிக்காத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

9. இவ்வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனம் அடையாளப்படுத்தப்படும், இரண்டாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரி தான் அதிவேகமாகவும், அல்லது கவனக்குறைவாகவும் ஓட்டினார் என்றும், மூன்றாவதாக எதிரி வாகனத்தை அவ்வாறு ஓட்டி கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும்.

10. இவ்வழக்கில் புகார்தாரரான பட்டியல் சாட்சி.1 இளமுருகன் 03.09.2025ம் தேதி அன்று இறந்துவிட்டதாக அரசு தரப்பில் அ.சா.ஆ.1 இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 திரு.வேலுமணி தலைமை காவலராகவும், அ.சா.2 நல்லப்பன் காயம்பட்ட சாட்சியாகவும், அ.சா.3 பாலுசாமி, அ.சா.6 தர்மலிங்கம் கண்ணுற்ற சாட்சிகளாகவும், அ.சா.4 சண்முகம் அ.சா.5 வெங்கடேசன் பார்வை மகஜர் சாட்சிகளாகவும், அ.சா.7 முருகேசன் புலன் விசாரணை அதிகாரியாக முன்னிலைபடுத்தப்பட்டுளனர்.

**11. இ.த.ச பிரிவு 279கீழ்கண்டவாறு கூறிகிறது.**

பொது பாதையில் முரட்டுத்தனமாக ஓட்டுதல் அல்லது சவாரி செய்தல், மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமான அல்லது வேறு எவருக்கேனும் காயம் அல்லது கேடு விளைவிக்கக்கூடிய அத்தகைய வகையிலும் பொதுப்பாதை ஏதோவொன்றிலும் வண்டி எதையும் முரட்டுத்தனமாக அல்லது கவனக்குறைவாக



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:18 +0530

ஓட்டுகிற அல்லது சவாரி செய்கிற எவறாயினும் 6 மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஓர் ஆயிரம் வரை நீடிக்கக்கூடிய அபராதமும் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப் படவேண்டும்.

11.1 மேற்படி பிரிவின்படிக்கு முதலாவது உட்கூறான பொதுப்பாதை மற்றும் இரண்டாவது உட்கூறான ஆஜர் எதிரிதான் வாகனத்தை இயக்கினாரா என்பதை பொறுத்து இருதரப்பிலும் எந்தவித ஐயப்பாடும் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.2 மேற்படி பிரிவின்படிக்கு மூன்றாவது உட்கூறான எதிரி அசட்டுத்தனமான தகாதுணிச்சல் அல்லது கவனக்குறைவாக அவரது இருசக்கர வாகனத்தை இயக்கி அ.சா.2 நல்லப்பன் என்பவருக்கு கொடுங்கயாத்தை ஏற்படுத்தினாரா என்று பரிசிலனை செய்கையில், அ.சா.2 நல்லப்பன் தனது சாட்சியத்தில், கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலையில் தான் ஆனந்தம்பாளையம் பிரிவு அருகே ரோட்டை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தனது TVS 50 வாகனத்தில் கடக்கும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த Hero Honda பைக் வேகமாக வந்து தன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில், தனது காலில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், இந்த விபத்து தொடர்பாக தனது மகன் இளமுருகன் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தும், தனது மகன் தற்போது இறந்துவிட்டதாகவும், தன் மீது பைக்கை மோதி விபத்து ஏற்படுத்திய நபரை தனக்கு அடையாளம் தெரியாது என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.

11.3 இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 பாலுசாமி தனது சாட்சியத்தில், கடந்த 5–6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தான் ஆனந்தம்பாளையம் பிரிவு அருகே தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, இந்த விபத்தில் அடிபட்ட நல்லப்பன் என்பவர் அந்த சாலையை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தனது XL வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த Hero Honda Duo வாகனம் நல்லப்பனின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும்,



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.13 18:17:21 +0530

விபத்தை நேரில் பார்த்த தான் அருகில் சென்று பார்த்தபோது, அவருக்கு காலில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்ததாகவும், பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் ஆம்புலன்ஸ் மூலம் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 தர்மலிங்கம் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்று கூறி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

11.4 வழக்கிற்கு அடிப்படையான புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில், புகாரானது விபத்து நடைபெற்ற மறுநாள் கொடுக்கப்பட்டுள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், புகாரின் அடிப்படையில் 23.04.2019ம் தேதி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 25.04.2019ம் தேதிதான் இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. மேற்படி 2 நாட்கள் காலதாமதத்திற்கு அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் கொடுக்கவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.5 மேற்படி கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3, அ.சா.6 சாட்சிகளின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.2 இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அவர் தனது சாட்சியத்தில், TVS 50 வாகனத்தில் கடக்கும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த Hero Honda பைக் வேகமாக வந்து தன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில், தனது காலில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால், சம்பவமானது ஆனந்தம் பிரிவிலிருந்து 20 அடி உள்ளே சென்றபின்புதான் விபத்து நடைபெற்றுள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 பாலுசாமி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் நல்லப்பன்தான் சம்பவத்தின்போது, குறுக்கே சென்றதால்தான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். இரண்டு பக்கமும் வண்டி வருகிறதா என்று பார்த்து நல்லப்பன் சென்றிருந்தால் விபத்து நடைபெற்று இருக்காது என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.13 18:17:24 +0530

11.6 மேற்படி சாட்சியத்திலிருந்து எதிரியின் அசட்டுத்தனமான தகா துணிச்சல், கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டதா என இந்நீதிமன்றத்திற்கு சந்கேதம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும், மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 விபத்தை பார்க்கவில்லை என அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பில் நீதிமன்ற அனுமதியுடன் குறுகுக்கு விசாரணை செய்தும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.7 மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில், பைக் வேகமாக வந்து மோதியதாக சாட்சியமளித்துள்ளார். வேகமாக வாகனத்தை இயக்கினார் என்கிற காரணத்தினாலேயே எதிரியின் அசட்டுத்தனமான தகா துணிச்சல் மற்றும் கவனக்குறைவை காட்டாது என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் பல தீர்புகளில் கூறியுள்ளது.

**State of Karnataka/vs/Sathish**
**1998 (8) SCC 493**

in which our Hon'ble Apex Court categorically observed that, *"4. Merely because the truck was being driven at a "high speed does not bespeak of either "negligence" or "rashness" by itself. None of the witnesses examined by the prosecution could give any indication, even approximately, as to what they meant by "high speed." High Speed" is a relative term. It was for the prosecution to bring on record material to establish as to what it meant by "high speed"in the facts and circumstances of the case. In a criminal trial, the burden of providing everything essential to the establishment of the charge against an accused always rests on the prosecution and there is a presumption of innocence in favour of the accused until the contrary is proved. Criminality is not to be presumed, subject of course to some statutory exceptions…*

11.8 மேலும், இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 சண்முகம் தனது சாட்சியத்தில், கடந்த 23.04.2019 ஆம் தேதியன்று தானும், தங்கள் ஊரைச் சேர்ந்த துரைசாமி என்பவரும் ஆனந்தம்பாளையம் வே ப்ரிட்ஜ் அருகே வந்து கொண்டிருந்தபோது போலீசார் முன்தினம் நடைபெற்ற வாகன விபத்து தொடர்பாக



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:28 +0530

சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதால் தான் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார். ஆனால், அவரது குறுக்கு விசாரணையில், தான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தனக்கு தெரியாது என்று கூறியுள்ளார். மேலும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 வெங்கடேசன் தனது சாட்சியத்தில், கடந்த 5 வருடங்களக்கு முன்பு ஒருநாள் தனது வீட்டிற்கு அருகில் சாலை விபத்து ஏற்பட்டதற்கு மறுநாள் போலீசார் விபத்து நடந்த இடத்திற்கு வந்து விபத்து தொடர்பாக சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதால் தான் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சாட்சிமயளித்துள்ளார்.

11.9 ஆகவே, மேற்படி சாட்சியங்களிலிருந்து பார்வை மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும், மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அருணாச்சலம் சாக்கு கடை, வெங்கடேஷ் அட்டை வீடு, ஆறுமுகம் டீ கடை சத்தியம் டீ ஸ்டால், சண்முகம் டீ கடை போன்றவை சம்பவயிடத்தில் உள்ள சாட்சிகளை விசாரிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.10 மேலும், விபத்து ஏற்படுத்திய வாகனமானது 23.10.2019ம் தேதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்பது அ.சா.ஆ.6 பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. விபத்து ஏற்பட்ட வாகனமானது 23.10.2019ம் தேதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்பது அ.சா.ஆ.5 பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.11 மாண்புமிகு உச்சநீதிமன்றம் Ravi kapur VS State of Rajasthan எனும் வழக்கில் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஒட்டுதல் நேரடியான சாட்சியம் அல்லது சுற்றியுள்ள சூழ்நிலைகள் மற்றும் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஓட்டுதல் அனுமானம் ஆகியவற்றின் மூலம் நிரூபணம்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:30 +0530

செய்யப்படலாம் மேலும் சுற்றியுள்ள சூழ்நிலைகள் மூலம் வழக்கானது நிரூபணம் செய்யப்படும் நிலையில் செயலே செப்பும் (Doctrine of res ipsa loquittur) என்ற முது மொழியும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி பரிசீலனையின் அடிப்படையில், அரசு தரப்பில் எதிரியின் அசட்டுத்தன்மாக தகா துணிச்சல், அஜாக்கிரதையின் காரணமாக விபத்து ஏற்பட்டது என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், செயலே செப்பும் என்கிற விதிப்படியும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு கண்டு எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவு 279ன் படியாக உட்கூறு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.

**12. இ.த.ச. பிரிவு 338 கீழ்கண்டவாறு கூறுகிறது.**

மனித உயிருக்கு அல்லது மற்றவர்களின் உடற் பாதுகாப்பிற்கு அபாயம் ஏற்படும் அளவிற்கு கவனக்குறைவாக அல்லது முரட்டுத்தனமாக எந்த செய்கையேனும் செய்வதன் மூலம் எவருக்கேனும் கொடுங்காயம் விளைவிக்கிற எவரொருவரும் 2 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவு சிறைதண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஓராயிரம் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

12.1 மேற்படி பிரிவின்படி எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் அ.சா.2 நல்லப்பன் என்பவருக்கு எதிரி கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் நிரூபித்தல் வேண்டும். இந்நிலையில் அ.சா.ஆ.10 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், மேற்படி அ.சா.2க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது அ.சா.ஆ.10 மூலம் அரசுதரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இ.த.ச பிரிவு 279ன் கீழ் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் அ.சா.2க்கு ஏற்பட்ட காயமானது எதிரியின் அசட்டுத்தனமான தகாதுணிச்சல் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது என தீர்மானிக்க இயலாது. எனவே, எதிரிக்கு எதிரான



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:34 +0530

இ.த.ச பிரிவு 338ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே முடிவு செய்யப்படுகின்றது.

13. **மோட்டார் வாகன சட்டப் பிரிவு 39(1) r/w 192(1), 50 r/w 177, 146 r/w 196, 3 r/w 181கீழ் கண்டவாறு கூறுகிறது.**

**Sec. 39(1) r/w 192(1) -** Using vehicle without registration.—(1) Whoever drives a motor vehicle or causes or allows a motor vehicle to be used in contravention of the provisions of section 39 shall be punishable for the first offence with a fine which may extend to five thousand rupees but shall not be less than two thousand rupees for a second or subsequent offence with imprisonment which may extend to one year or with fine which may extend to ten thousand rupees but shall not be less than five thousand rupees or with both:

**Sec 50 r/w 177 -** General provision for punishment of offences— failure to report vehicle ownership transfer. Whoever contravenes any provision of this Act or of any rule, regulation or notification made thereunder shall, if no penalty is provided for the offence be punishable for the first offence with fine which may extend to one hundred rupees, and for any second or subsequent offence with fine which may extend to three hundred rupees.

**Sec. 146 r/w 196 -** Driving uninsured vehicle.—Whoever drives a motor vehicle or causes or allows a motor vehicle to be driven in contravention of the provisions of section 146 shall be punishable with imprisonment which may extend to three months, or with fine which may extend to one thousand rupees, or with both.

**Sec. 3 r/w 181 -** dealt with driving without a valid license. The penalty was significantly lower, capping at a maximum fine of ₹500, up to 3 months in jail, or both

13.1 மேற்படி பிரிவுகளின் படி பரிசீலனை செய்கையில், எதிரி ஓட்டி சென்ற வாகனத்திற்கு பதிவு சான்றிதழ், காப்பீடு மற்றும் எதிரிக்கு வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்பது குறித்து பரிசீலனை செய்கையில், இந்திய சாட்சிய சட்டம் 106ன் படி ஒரு பொருண்மை அது, ஒரு நபரின் சிறப்புப் புரிதலுக்குள் (especially within the



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.13 18:17:37 +0530

knowledge of any person) இருந்தால், அந்தப் பொருண்மையை மெய்ப்பிக்கும் சுமை (Burden of proof) அந்த நபரையே சேரும். எடுத்துக்காட்டாக ரயிலில் பயணச் சீட்டு (Ticket) இல்லாமல் பயணம் செய்ததாக, A மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது எனில், தான் பயணச்சீட்டு வாங்கியுள்ளதை, A தான் மெய்ப்பிக்க வேண்டும் என கூறியுள்ளது. மேற்படி ஆவணங்கள் இருந்ததா என்பது எதிரிக்கு மட்டுமே தெரிந்த சங்கதியாகும். எதிரி தனது குற்றச்சார்த்து குறித்து வினவியபோது, பொய் வழக்கு என்னிடம் ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று கூறியுள்ளார். ஆனால், மேற்படி பதிலுக்கு ஆதரவாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே, எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள **மோட்டார் வாகன சட்டப் பிரிவு 39(1) r/w 192(1), 50 r/w 177, 146 r/w 196, 3 r/w 181ன்** படி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

14. முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் எந்தவிதமான ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாத நிலையில் எழும் ஐயத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இ.த.ச.பிரிவுகள் **279, 338ன்** கீழ் **குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச.பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை** செய்தும், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான மோட்டார் வாகன சட்டப் பிரிவு 39(1) r/w 192(1), 50 r/w 177, 146 r/w 196, 3 r/w 181ன் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்ட நிலையில் எதிரியை மேற்படி மோட்டார் வாகன சட்டப் பிரிவுகளின் கீழ் **குற்றவாளி என முடிவு கண்டு கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன்** கீழ் எதிரிக்கு மோட்டார் வாகனச் சட்டத்தின் **பிரிவு 39(1) r/w பிரிவு 192(1)ன்** கீழ் **ரூ.2,000** அபராதமும் அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு வாரம் சாதாரண சிறைத்தண்டனை விதித்தும், **பிரிவு 50 r/w பிரிவு 177–ன்** கீழ் **ரூ.100 அபராதமும்** அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு வாரம் சாதாரண சிறைத்தண்டனை விதித்தும், **பிரிவு 146 r/w பிரிவு 196–ன்** கீழ் **ரூ.1,000** அபராதமும் அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு வாரம் சாதாரண சிறைத்தண்டனை விதித்தும் மற்றும் **பிரிவு 3 r/w பிரிவு 181–ன்** கீழ் **ரூ.500** அபராதமும் அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு வாரம் சாதாரண சிறைத்தண்டனை விதித்து உத்தரவிடப்படுகிறது. **மொத்த அபராதத் தொகை ரூ.3,600/–**



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:48 +0530

15. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜீலை மாதம் 13ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:41 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**

இணைப்பு:

அரசு தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.வேலுமணி | தலைமை காவலர் |
| அ.சா.2 | திரு.நல்லப்பன். | காயம்பட்ட சாட்சி |
| அ.சா.3 | திரு.பாலுசாமி. | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.சண்முகம். | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | திரு.வெங்கடேசன். | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | திரு.தர்மலிங்கம் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.7 | திரு.முருகேசன் | சிறப்பு உதவி ஆய்வாளர் |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| அ.சா. ஆ.எண் | தேதி | ஆவணங்கள் | யாரால் குறியீடு செய்யப் பட்டது | குறிப்பு |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23.04.2019 | இறப்பு சான்றிதழ் | அ.சா.1 | நகல் |
| அ.சா.ஆ.2 | 23.04.2019 | காவல் உதவி ஆய்வாளர் வழங்கிய கடிதம் | அ.சா.1 | அசல் |
| அ.சா.ஆ.3 | 23.04.2019 | பார்வை மகஜர் | அ.சா.4 | அசல் |
| அ.சா.ஆ.4 | 23.04.2019 | புகார் மனு | அ.சா.7 | அசல் |
| அ.சா.ஆ.5 | 23.04.2019 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 | அசல் |
| அ.சா.ஆ.6 | 23.04.2019 | மாதிரி வரைபடம் | அ.சா.7 | அசல் |



RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:51 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.7 | 23.10.2019 | TN 36 C 4161 என்ற TVS 50 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை. | அ.சா.7 | அசல் |
| அ.சா.ஆ.8 | 23.10.2019 | எதிரி ரஞ்சித் குமார் ஓட்டிச் சென்ற பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை. | அ.சா.7 | அசல் |
| அ.சா.ஆ.9 | 22.04.2019 | விபத்து பதிவேடு | அ.சா.7 | அசல் |
| அ.சா.ஆ.10 | 22.04.2019 | காயச்சான்று | அ.சா.7 | அசல் |
| அ.சா.ஆ.11 | 11.12.2019 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.7 | அசல் |

அரசு தரப்பு சான்றுபொருட்கள்: – இல்லை –

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:– – இல்லை –

குறிப்பு:

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:17:55 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**